සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | විෂයය / பாடம் / Subject: கிறிஸ்தவம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டதற்கான காரணம்,
   i. வேறு மொழி இல்லாமை
   ii. கிறிஸ்துவிற்கு முன் உரோமையில் கிரேக்க மொழி பயன்பாட்டில் இருந்தமை.
   iii. அக்காலத்தில் அதுவே பொதுவான மொழியாக இருந்தமை.
   iv. போதிப்பதற்கு இலகுவாக இருந்தமை.
   v. மேற்கூறிய எல்லா விடைகளும் பொருத்தமற்றவை.

(……)

02) கடவுளைக் குறிக்கப்பயன்படும் யாவே என்ற சொல்லின் பொருள்,
   i. ஆண்டவர்
   ii. கிறிஸ்து
   iii. இறைதந்தை
   iv. தேவன்
   v. கடவுளாகிய ஆண்டவர்

(……)

03) இறைவாக்கினராகிய எலியாவிற்கும் பாகாலின் போலி இறைவாக்கினருக்குமிடையில் (குருக்களுக்கும்) சம்பவம் நடைபெற்ற இடம்,
   i. எருசலேம் மலை
   ii. தாபோர் மலை
   iii. கபால மலை
   iv. கார்மேல் மலை
   v. மோரியா மலை

(……)

04) தொடர்பு படுத்தினால் கிடைக்கும் சரியான விடை,

| | |
|---|---|
| • ரதா | a. பயிரிடுதல் |
| • அபார் | b. பாதுகாத்தல் |
| • அபாத் | c. பணியாளன் |
| • அமார் | d. ஆட்சி செய்தல் |

   i. a,b,c,d
   ii. d,c,a,b
   iii. b,c,a,d
   iv. c,b,a,d
   v. a,d,b,c

(……)

05) மோசே, மாசா, மெரிபா ஆகிய இடங்களில் தனது கோலினால் தட்டும் போது தண்ணீர் வந்தது எனக் குறிப்பிடும் நூல்,
   i. விடுதலைப்பயணம்
   ii. எண்ணிக்கை
   iii. தொடக்கநூல்
   iv. இணைச்சட்டம்
   v. லேவியர்

(……)

06) கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் நடைபெற்ற உடன்படிக்கைகளில் யாவே மற்றும் குருமரபில் கூறப்பட்டுள்ள உடன்படிக்கை,

i. நோவாவுடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை
ii. ஆபிரகாமுடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை
iii. மோசேயுடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை
iv. ஈசாக்குடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை
v. யாக்கோபுடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை

(……)

07) திருவிவிலியத்தில் பத்துக்கட்டளைகள் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நூல்களாவன,

i. தொடக்கநூல், விடுதலைப்பயணம்
ii. எண்ணிக்கை, இணைச்சட்டம்
iii. விடுதலைப்பயணம், இணைச்சட்டம்
iv. எண்ணிக்கை, லேவியர்
v. அரசர்கள், எண்ணிக்கை

(……)

08) எசாயா என்பதன் பொருள் யாது?

i. யாவே மீட்பராவார்
ii. யாவே உயர்தினார்
iii. யாவே விடுவிப்பார்
iv. கடவுள் வலிமை மிக்கவர்
v. கடவுள் பாதுகாப்பார்

(……)

09) இறைவாக்கினர் எசாயா முன்வைக்கும் மெசியாவின் நான்கு பண்புகளும் எவை?

i. வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன், என்றும் உள்ள தந்தை, அமைதியின் அரசர்
ii. வியத்தகு ஆலோசகர், சாமாதானத்தின் அரசன், நித்திய பிதா, இறைவனின் குமாரன்
iii. வியத்தகு ஆலோசகர், சாமாதானத்தின் அரசன், நித்திய பிதா, தெய்வீக அரசன்
iv. வியத்தகு ஆலோசகர், என்றும் உள்ள தந்தை, நித்திய பிதா, அமைதியின் அரசன்
v. வியத்தகு ஆலோசகர், அமைதியின் அரசன், நித்திய பிதா, வலிமை மிகு தந்தை

(……)

10) திருப்பாடல்கள் கடவுளின் முடிசூட்டும் விழாவின் பின்னணியில் தோன்றியதாகக் கூறியவர்,

i. சிக்மண்ட் மொவின்கள்
ii. ஹேர்மன் மெல்வின்
iii. ஹேர்மன் குன்கள்
iv. ஆதர் வைசர்
v. டி, எஸ், எலியட்

(……)

11) மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய ஒத்தமை நற்செய்தியாளர்கள் இஆயசுவின் பணியிலும் போதனையிலும் முக்கியத்துவம் கொடுத்துள்ளமை,

i. இறை அரசு
ii. மீட்பின் வழி
iii. உவமைகள், புதுமைகள்
iv. உயிர்ப்பு
v. நிலைவாழ்வு

(……)

12) சதோக் என்னும் குருவின் பரம்பரையில் வருகின்ற தலைமைக் குரு பதவிக்கு எதிர்ப்பைத் தெரிவித்தவர்கள்,

i. பரிசேயர்
ii. செலுக்கியர்
iii. எஸ்ஸேனியர்
iv. மறைநூல் அறிஞர்
v. சதுசேயர்

(……)

13) அதென்ஸ் நகரத்தில் புனித பவுல் மறையுரை ஆற்றிய இடம்,

i. தொழுகைக் கூடம்
ii. அரையோப்பா மண்டபம்
iii. வர்த்தக மத்திய நிலையம்
iv. எருசலேம் சங்கம்
v. தமஸ்கு மண்டபம்

(……)

14) எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பாராது தமக்கு தீங்கு விளைவித்த அல்லது தீங்கு செய்ய நினைத்த பிறருக்கு நன்மை செய்ய விரும்பும் உயரிய பண்பை கிரேக்க மொழியில் எவ்வாறு அழைப்பர்?

| | | |
|---|---|---|
| i. அகாபே | iii. அபாத் | v. ஷமார் |
| ii. ரதா | iv. அனாவ் | |

(……)

15) மறைத்தூதுப்பணியை முடித்துவிட்டு வேறு இடத்திற்குச் செல்லும் போது தமது கால்களில் உள்ள தூசியை தட்டுதல் வேண்டுமென இயேசு கட்டளையிட்டதன் பொருள்...

i. இறைவனின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு பொறுப்பை ஒப்படைப்பது
ii. கடவுளின் அமைதியை நிராகரிப்பவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது
iii. கடவுளின் அன்பை நிராகரிப்பவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது
iv. கடவுளின் இரக்கத்தை நிராகரிப்பவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது
v. கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்பவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது

(……)

16) "த்ரோகயின்" என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்,

i. பகிர்ந்து உண்ணுதல்
ii. தனியாக உண்ணுதல்
iii. நண்பர்களுடன் உண்ணுதல்
iv. ஒரே குழுவாக உண்ணுதல்
v. மென்று உண்ணுதல்

(……)

17) இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றதிலிருந்து நாம் கருதுவது,

i. இயேசு திருமுழுக்கு யோவானின் சீடராக மாறியமை
ii. கிறிஸ்து இறைமகன் என்பது
iii. கிறிஸ்து தேவ குமாரன் என்பது
iv. இயேசு பாவிகளின் அடையாளத்தைப் பெற்றுக்கொண்டார் என்பது
v. இயேசு இறை ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார் என்பது

(……)

18) கலாபனைக் காலங்களில் மறையாட்சி மரணம் எய்தியவர்கள்,

a. புனித லோரன்ஸ்
b. புனித அகத்தம்மாள்
c. புனித பீலிக்ஸ்
d. புனித அலெக்ஸ்சாந்தர்
e. புனித பபியன்
f. புனித ஜஸ்டின்
g. புனித 2வது சிகதுஸ்

மேலே குறிப்பிட்டவர்களுள் 8வது கலாபனையில் பேரரசன் வலேரியனால் மறையாட்சி மரணம் அடைந்தவர்கள்,

| | | |
|---|---|---|
| i. a b | iii. a g | v. v a g |
| ii. b c g | iv. e f g v a g | |

(……)

19) பெரிய யாக்கோபுவை வாளால் வெட்டிக் கொலை செய்தவர்,

i. பிலாத்து
ii. 1வது ஏரோது அக்கிரிப்பா
iii. ஏரோது அந்திபாஸ்
iv. திபேரியுஸ்
v. மெகசி

(……)

20) பேதகங்களுக்கு எதிராகக் கூட்டப்பட்ட திருச்சங்கங்கள்,

- முக்கியமற்ற பேதகம் — a. நிசேயா பொதுச்சங்கம்
- ஆரிய பேதகம் — b. கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கம்
- நெஸ்தோரிய பேதகம் — c. கல்சடோன் திருச்சங்கம்
- யுக்திக்கேய பேதகம் — d. எபேசு பொதுச்சங்கம்

மேலே உள்ளவற்றைத் தொடர்பு படுத்தினால் சரியான விடையாக அமைவது,

i. c b a d
ii. b d a c
iii. c d a b
iv. c b d a
v. a d b

(……)

21) திருத்தந்தை செலஸ்தீன் அவர்களால் கூட்டப்பட்ட எபேசு பொதுச்சங்கத்தில் சிறந்த மறையுரையாளராக செயற்பட்டவர்,

i. புனித அகுஸ்தினார்
ii. புனித ஜஸ்டின்
iii. புனித பவுல்
iv. புனித ஜெரோம்
v. புனித சிறில்

(……)

22) துறவற வாழ்வில் மறுசீரமைப்புக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் சில,

a- நிறைவாழ்வின் வழி
b- கார்மேல் சபை ஏற்றம்
c- இருண்ட இரவு
d- உள்ளக மாளிகை
e- ஆன்மீகப் பாடல்

இவற்றுள் புனித அவிலா தெரேசாவினால் எழுதப்பட்ட ஆக்கங்கள் ஆவன,

i. a d மட்டும்
ii. b c e f மட்டும்
iii. b c a மட்டும்
iv. b c a d
v. b a d c

(……)

23) திருத்தந்தையர்கள் தமது அதிகாரத்தை திருத்தூதர்களின் வழியாக கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதாகவும் அதனால் அவர்களிடமுள்ள அதிகாரம் உயர்ந்தது எனவும் கூறும் திருத்தந்தை ஏழாவது கிரகோரியாரின் சுற்றறிக்கை,

i. Pacem in Terris
ii. Mater Et Magistra
iii. Rerum Novarum
iv. Dictus Papae
v. Dei Pilius

(……)

24) போர்த்துக்கல்லும் ஸ்பெயினும் தாம் கைப்பற்றிய நாடுகளில் கிறிஸ்தவ மறையைப் பரப்புவதற்காக அனுமதி வழங்கி செய்து கொள்ளப்பட்ட "பத்றோ ஆடோ" திட்டத்தில் கைச்சாத்திட்ட திருத்தந்தை,

i. திருத்தந்தை அருளப்பர் சின்னப்பர்
ii. திருத்தந்தை 6வது அலெக்சாண்டர்
iii. திருத்தந்தை 11ம் பத்திநாதர்
iv. திருத்தந்தை 23வது அருளப்பர்
v. திருத்தந்தை 10ம் பத்திநாதர்

(……)

25) இலங்கையில் பாரசீகத்திலிருந்து வருகை தந்த கிறிஸ்தவ பக்தர் குழு ஒன்று இருந்ததாக தமது நூலில் குறிப்பிடுபவர்,

i. E R அயர்டைன்
ii. ஜேம்ஸ் பீரிஸ்
iii. கொஸ்மஸ் இன்டிகே
iv. பீட்டர் பிள்ளை
v. செனரத் பரணவித்தாரண

(……)

26) பிரித்தானியர் காலத்தில் இலங்கையருக்கு பூரண மதச்சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தது,

i. சீனாய் உடன்படிக்கை
ii. ஜேம்ஸ் ருவட் உடன்படிக்கை
iii. தோமஸ் மெயின்லண்ட் உடன்படிக்கை
iv. மக்னா காட்டா சட்டம்
v. பத்றோ ஆடோ

(……)

27) பின்வரும் வாக்கியங்களை அவதானிக்குக

a - பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்கு தண்டம் விதித்தல்.

b - முறையான பாடசாலைக் கல்வியை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டமை.

c - கல்விப் பொறுப்பை ஒல்லாந்த அரசு பொறுப்பேற்றமை

d - மேலைத்தேய மொழிகளும் மேலைத்தேய கல்வி முறைகளும் இந்நாட்டில் பரப்பப்பட்டன.

e - அபராதப் பணத்தை சேகரிப்பதற்கு மறைக்கல்வியாளர்கள் நியமிக்கப்பட்டமை

இவற்றுள் ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்,

i. b மட்டும்
ii. d e மட்டும்
iii. b d மட்டும்
iv. a c d மட்டும்
v. a c e மட்டும்

(……)

28) 1960 இல் அரச உதவி பெறும் சமய பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டமையால் கிறிஸ்தவர்களுக்கு மறைக்கல்வியை வழங்குவதற்கு ……………………………… ஆரம்பிக்கப்பட்டன. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்,

i. பங்குமட்டத்தில் மறைப்பாடசாலைகள்
ii. தேவாலயங்கள்
iii. ஆலயத்தில் பக்திச்சபைகள்
iv. மறைமாவட்டப் பாடசாலைகள்
v. மறையாசிரியர்கள் ஒன்றியம்

(……)

29) மனிதன் மாண்புடையவனாக இருப்பதற்கான சிறப்புப் பண்பு,

i. மனிதனின் இரக்ககுணம்
ii. மனிதனின் மனச்சாட்சி
iii. மனிதனின் தொடர்பாற்றல்
iv. மனிதனின் இரக்கம்
v. மனிதனின் தாழ்ச்சி

(……)

30) இங்கிலாந்து உரோமன் கத்தோலிக்க ஆணைக்குழுவை ஆரம்பித்தவர்கள்,

i. காண்டற்பெரியின் பேராயர் மேதகு மைக்கல் ரம்சி, திருத்தந்தை 6ம் சின்னப்பர்
ii. காண்டற்பெரியின் பேராயர் மேதகு மைக்கல் ரம்சி, திருத்தந்தை 6வது சின்னப்பர்
iii. காண்டற்பெரியின் பேராயர் மேதகு சிறில், திருத்தந்தை 1ம் சிங்கராயர்
iv. காண்டற்பெரியின் பேராயர் விலியம் பூத், திருத்தந்தை 6வது சின்னப்பர்
v. காண்டற்பெரியின் பேராயர் ராபாயேல், திருத்தந்தை 6வது சின்னப்பர்

(……)

31) "இறை பராமரிப்பு" சுற்றுமடலின் படி திருவிவிலியத்தின் ஆசிரியத்துவம் பற்றி வலியுறுத்தும் திருத்தந்தை

i. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்
ii. திருத்தந்தை 13ம் லியோ
iii. திருத்தந்தை 14ம் பெனடிக்
iv. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
v. திருத்தந்தை 9ம் கிரகோரியார்

(……)

32) பாரசீகர் காலத்தில் பபிலோனியாவில் வாழ்ந்த யூதர்கள் தமது சொந்த நாட்டை நோக்கி கட்டங்களில் வருகைதந்தனர். இவ்வாறு கி.மு 444 இல் மூன்றாவது கட்டத்தில் வாழ்ந்த போது தலைமை வகித்தவர்,

i. எஸ்ரா
ii. செருபாவேல்
iii. யோசுவா
iv. எஸ்தர்
v. நெகேமியா

(……)

33) அசீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டபோது வட அரசின் யாத்திரை தலங்களாக இருந்தவை,

i. தாண், நப்தலி
ii. பெத்தேல், தாண்
iii. செக்கேம், கானான்
iv. செக்கேம்
v. பெத்தேல், செக்கேம்

(……)

34) திருவிவிலியத்தின்படி ஆணும் பெண்ணும் சமமானவர்கள் எனக்கூறப்படுவதற்கு காரணம்,

i. ஆதாம் பெண்ணுக்கு பெயர் வைத்தமையால்
ii. ஆபிரகாம் பெண்ணுக்கு பெயர் வைத்தமையால்
iii. ஈசாக் பெண்ணுக்கு பெயர் வைத்தமையால்
iv. பெண்ணே பெண்ணுக்கு பெயர் வைத்தமையால்
v. பெண்ணுக்கு பெயர் வைத்தமை செயற்பாட்டு வினையில் கூறப்பட்டமை

(……)

35) விடுதலை பயணத்தின் போது இஸ்ராயேல் மக்கள் எதிர் கொண்ட படையெடுப்பு எது?

i. ஆசீரியப் படையெடுப்பு
ii. எகிப்தியப் படையெடுப்பு
iii. அமலேக்கியரின் படையெடுப்பு
iv. உரோமை படையெடுப்பு
v. கிரேக்கப் படையெடுப்பு

(……)

36) யாக்கோபு இறைதூதருடன் போராடிய இடம் எது?

i. பெனியேல்
ii. மாசா
iii. மெரியா
iv. ஓரேபு
v. சீனாய்

(……)

37) சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ராயேல் மக்கள் பெற்ற சிறப்புரிமையான அர்ப்பணிக்கப்பட்ட இனம் என்பதை குறிக்கும் எபிரேய சொல்,

i. ஷாமா
iii. கோல் காடோஷ்
v. ரெகபோத்
ii. அபாத்
iv. செகுல்லா

(……)

38) கொதிக்கும் எண்ணெய் கொப்பறையில் போடப்பட்டும் ஆபத்தேற்படாததால் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டவர் யார்?

i. புனித ஜஸ்டின்
iv. புனித லூக்கா
ii. புனித பேதுரு
v. புனித யோவான்
iii. புனித பவுல்

(……)

39) பின்வருவனவற்றில் அவதானத்தை செலுத்துக.

A- ஸ்தேவான் B- பிலிப்பு C- பேதுரு D- பிரகோசு E- பவுல் F- ஜஸ்டின்

இப்பெயர்களுள் தொடக்கத்திருச்சபையில் திருத்தொண்டர்களாக நியமிக்கப்பட்ட நபர்களை உள்ளடக்கிய விடை எது?

i. A மாத்திரம்
iii. D E F
v. A C E
ii. C E F
iv. A B D

(……)

40) ‘‘தாலியா’’ என்ற பாடல்கள் எந்த பேதகத்துடன் தொடர்புடையவை,

i. ஆரிய பேதகம்
iv. யுத்திக்கேய பேதகம்
ii. முக்கியமற்ற பேதகம்
v. பெலாஜிய பேதகம்
iii. நெஸ்தோரிய பேதகம்

(……)

41) தொடக்க காலத்தில் கிறிஸ்தவ எழுத்தாளர் ஒருவரை திருச்சபை தந்தையர் என அழைத்தபோது கவனத்தில் கொள்ள படாத விடயம்,

i. முன்வைத்த போதனையின் உண்மை தன்மை
ii. அவர் வாழ்ந்த காலப்பகுதி
iii. அவரின் தூய்மையான வாழ்வு
iv. தூய திருச்சபையின் அங்கீகாரம்
v. மறைசாட்சி மரணம் அடைந்தமை

(……)

42) முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டியவர் யார்?

i. திருத்தந்தை 13ம் சிங்கராயர்
iv. திருத்தந்தை 12ம் பயஸ்
ii. திருத்தந்தை 11ம் பயஸ்
v. திருத்தந்தை 9ம் பயஸ்
iii. திருத்தந்தை 23ம் ஜோன்

(……)

43) புனித கொலம்பாவில் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபை யாது?

i. பெனடிக் துறவறசபை
ii. சிஸ்டரேரியன் துறவறசபை
iii. குளுனி துறவறசபை
iv. இயேனா துறவறசபை
v. மொன்டிகசீனோ துறவறசபை

(……)

44) மறைபரப்புப் பணிக்காக மறைபரப்பாளர்கள் கையாண்ட சில நடவடிக்கைகள்,

A - சமய நூல்கள் தேசிய மொழியில் எழுதியமை

B – சிறுபிள்ளைகளுக்கு மறைக்கல்வியைக் கற்பித்த ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தமை.

C – மேற்பார்வையாளர்கள் மூலம் பாடசாலைகளைன் கண்காணித்தமை.

D – பல்வேறு இரக்கப்பணிகளில் ஈடுபட்டமை.

E – பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்கு தெண்டம் விதித்தமை.

இவற்றுள் போர்த்துக்கேய மறைப்பாளர்கள் பின்பற்றிய வழிமுறைகள்,

i. A B E
ii. C D E
iii. A B D
iv. B C E
v. A

(……)

45) ‘‘சர்வதேச சபைகள் சம்மேளனத்தில்’’அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை யாது?

i. 110 க்கும் அதிகம்
ii. 50 க்கும் அதிகம்
iii. 200 க்கும் அதிகம்
iv. 75 க்கும் அதிகம்
v. 80

(……)

46) இலங்கைத் திருச்சபையின் முதலாவது தமிழ் ஆயர்,

i. அருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை
ii. அருட்திரு எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை
iii. அருட்திரு இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை
iv. அருட்திரு ஜோசப் மரிய ரத்தினம் ஆண்டகை
v. அருட்திரு எட்மண்ட் பீரிஸ்

(……)

47) அருட்பணி யாக்கோமே கொண்ஸ்சால்வெஸ் அடிகளார் எந்த துறவறசபையைச் சேர்ந்தவர்,

i. டிலாசால் சபை
ii. அமலமரி தியாகிகள் சபை
iii. இயேசு சபை
iv. ஒறற்றோரியன் சபை
v. கார்மேல் சபை

(……)

48) சுதந்திரத்தின் பின் இலங்கைத் திருச்சபை எதிர் கொண்ட சவால்கள் இரண்டு:

i. பாடசாலைகளை அரசு சுவீகரித்தமை, துறவறசகோதரிகள் அரசாங்க மருத்துவ சேவையிலிருந்து நீக்கப்பட்டமை.
ii. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றமை, துறவிகள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டமை.
iii. துறவிகள் அரசாங்க மருத்துவ சேவையிலிருந்து நீக்கப்பட்டமை, குருக்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டமை
iv. இலங்கைத் திருச்பையை வழிநடத்த ஆயர் இல்லாதிருந்தமை, குருக்கள் நாடுகடத்தப்பட்டமை.
v. பாடசாலைகனை அரசு சுவீகரித்தமை, திருச்சபை பலவீனம் அடைந்தமை.

(……)

49) மனித மாண்பை வளர்ப்பதற்கு காலம், நேரம், செல்வம் முழுவதையும் செலவழிக்க வேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை,

i. விதைப்பவன் உவமை
ii. செல்வந்தனும் லாசரும்
iii. நல்ல சமாரியன்
iv. நல்லாயன் உவமை
v. களைகள் பற்றிய உவமை

(……)

50) இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்காக வெளியிட்ட விதித்தொகுப்புகள் யாவை?

i. கீழைத்தேய திருச்சபை குறித்த விதித்தொகுப்பு, கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கான விதித்தொகுப்பு
ii. கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபை குறித்த விதித்தொகுப்பு, குருத்துவ பயிற்சிக்கான விதித்தொகுப்பு
iii. குருத்துவ வாழ்வு பற்றிய விதித்தொகுப்பு, கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டிற்கான விதித்தொகுப்பு
iv. பொதுநிலையினரின் மறைப்பணி குறித்த விதித்தொகுப்பு, குருத்துவ வாழ்வு பற்றிய விதித்தொகுப்பு
v. கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபை பற்றிய விதித்தொகுப்பு, துறவறவாழ்வின் மறுசீரமைப்பு பற்றிய விதித்தொகுப்பு

(……)